# Special Issue

# National Conference on Creative Arts

# History of the Foundation People

## தேசியக் கருத்தரங்கம் படைப்பிலக்கியங்களில்

## அடித்தள மக்கள் வரலாறு

Organized by

Department of Tamil,

**Sir Theagaraya College,**

Chennai, on 23.10.2021 - 24.10.2021

in collaboration with


## International Research Journal of Tamil

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(UGC Care Approved & MLA Indexed Journal)

# Guest Editor Message



இலக்கியம் என்பது வெறும் கற்பனை அனுபவத்திலும் வார்த்தை ஜாலங்களிலும் மூழ்கி அதன் அழகியலில் மயங்கி இருப்பதுதான் என்ற பிரமையை சில இலக்கியவாதிகள் உடைத்தபோது இலக்கிய உலகம் பெரும் அதிர்வினை எதிர்கொண்டது. இலக்கியங்கள் அதீத புனைவுகளில் இருந்து விடுபட்டு சமூகத்தின் எதார்த்த முகத்தை பதிவு செய்ததன் மூலம் மானுடத்தின் முழுமையான தரிசனம் வெளிப்படத் துவங்கியது. இத்தகைய நடப்பியல் சார்ந்த எழுத்துகளைக் கைக்கொண்டு தமிழிலும் பல்வேறு இலக்கியப் போக்குகள் வளரத் துவங்கின. அவ்வகையில் மேட்டுக்குடி ரசனை அனுபவத்திற்காக மட்டுமே உரித்தானதாய் கருதப்பட்டு வந்த இலக்கிய வெளி சாமானிய மக்களின் வாழ்வியலை பதிவு செய்யத் துவங்கியது. எழுபதுகளில் Subaltern Studies என்ற துறை எழுச்சி பெற்று அடித்தள மக்களின் வாழ்வியல், இலக்கியங்களில் அதிகம் பதிவு செய்யப்பட்டது. வரலாறு புறம் தள்ளிய சமூகத்தின் இருண்மை பக்கங்களை இவ்விலக்கியங்கள் மீட்டெடுத்து சபை ஏற்றின. பெரும்பான்மைச் சமூகம் முகம் சுளித்து பாரா முகம் காட்டிய, திட்டமிட்டு புறக்கணித்த ஒரு பகுதியை இவ்விலக்கியங்கள் வெளிச்சமிட்டு காட்டின.

அத்தகைய அடித்தள மக்களின் வாழ்வியலை மையமிட்டு வெளிவந்த படைப்புகள் இலக்கிய வெளியிலும் சமூகத்திலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அறியும் விதமாகவே "படைப்பிலக்கியங்களில் அடித்தள மக்கள் வரலாறு" எனும் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஆய்வாளர்கள் எங்களின் சராசரி எதிர்பார்ப்பையும் மீறி பல்வேறு ஆய்வுக்களங்களையும் ஆய்வு எல்லைகளையும் விரித்தபோது இக்கருத்தரங்கம் அதன் பயனை அடைந்த மகிழ்ச்சி எம்முள் குடிகொண்டது. சர்வதேச தமிழ் ஆய்விதழ் நிறுவனத்தோடு இணைந்து நடத்தியது இக்கருத்தரங்கின் சிறப்பை மேலும் மெருகூட்டியது. இந்நிறுவனம் தமது இதழ் மூலமாக தரமான இலக்கியக் கட்டுரைகளை வெளிக் கொணரும் அதேவேளையில் பல்வேறு கருத்தரங்குகள் மூலம் பல்வேறு நவீன தமிழ் ஆய்வுக் களங்களை உருவாக்கும் அவர்தம் பணி பாராட்டுக்குரியது. தமிழ் இலக்கிய இலக்கணங்களில் புதிய ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் அவர்களின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகள்.



**முனைவர் ம. சுஜாதா**

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

**Dr. M.Sujatha**

**Guest Editor cum Conference Convenor**